



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2025) சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் நடைபெற்ற அரசு விழாவில் 17.86 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 23 முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, 3 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப்பணிக்கு அடிக்கல் நாட்டி, 8,301 பயனாளிகளுக்கு 88.37 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில், அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, எஸ்.இரகுபதி, கேஆர். பெரியகருப்பன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி, காதர்பாட்சா முத்துராமலிங்கம் மற்றும் குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, திருப்புவனம் பேரூராட்சித் தலைவர் திரு.த.சேங்கை மாறன், சிங்கம்புணரி பேரூராட்சித் தலைவர் ந.அம்பலமுத்து, துணைத் தலைவர் பி.செந்தில்குமார் உட்பட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.

## அப்பாவி அ.தி.மு.க தொண்டர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்:

# அடிமைகளையும் கொள்கையற்ற கூட்டத்தையும் அரசியலில் இருந்தே அப்புறப்படுத்த முன் வரவேண்டும்!

## சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி சிலை திறப்பு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறைகூவல்!

சிவகங்கை, நவ. 16-

சிவகங்கை மாவட்டம் - சிங்கம்புணரியில் பேரறிஞர் அண்ணா மன்றம், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் முழு உருவச்சிலை - முன்னாள் அமைச்சர் செ.மாதவன் அவர்களின் முழு உருவச்சிலை - கழக முன்னோடி மறைந்த ஓ.பி.டி.சொக்கலிங்கம் அவர்களின் திருஉருவப் படம் ஆகியவற்றை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர், “இந்த சிவகங்கை, வீரமங்கை வேலு நாச்சியார் - மருது பாண்டியர்கள் வாழ்ந்த வீரம் செறிந்த மண். இந்த மண்ணில் இருக்கிற அப்பாவி அ.தி.மு.க தொண்டர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அடிமைகளையும் கொள்கையற்ற கூட்டத்தையும் தமிழ்நாட்டு அரசியலில் இருந்தே அப்புறப்படுத்த வேண்டும். அதுதான் தமிழ்நாட்டின் எதிர்காலத்திற்கு நாம் செய்ய வேண்டிய கடமை” என்று குறிப்பிட்டார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:

இந்த விழாவை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள, மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் பெரிய கருப்பன் அவர்களுக்கு முதலில் என் அன்பையும், நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு கழகத்தின் உடன்பிறப்புகள், திராவிட இயக்க பற்றாளர்கள் என்று பெருந்திரளாக எல்லோரும் கூடியுள்ளீர்கள். நம் கழகத்தின் இளைஞர் அணி சார்பாக, சென்னையில் கடந்த 10 நாட்களாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் பவள விழாவைக் கொண்டாடுகிற வகையில், அறிவுத் திருவிழாவை நாங்கள் கொண்டாடுகிறோம்.

### மூன்று விஷயங்கள் முக்கியம்

சென்னையில் இளைஞர் அணி அறிவுத் திருவிழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. இங்கு சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் கொள்கைத் திருவிழாவை, நீங்கள் இன்று கொண்டாடிக்கொண்டு இருக்கிறீர்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதில் உள்ளபடியே எனக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது. ஒரு கட்சி வெற்றிகரமாக செயல்பட வேண்டும் என்றால், மூன்று விஷயங்கள் மிகவும் முக்கியம்.

முதலில் கட்சிக்கு ஒரு நல்ல தலைமை, இரண்டாவது ஆழமான கொள்கைகள், மூன்றாவது வலுவான கட்டமைப்பு வேண்டும். இந்த மூன்றும் இருந்தால்தான், அந்த இயக்கம் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, வளர முடியும். நல்ல தலைமை மட்டும் இருந்து, சரியான கொள்கை இல்லை என்றால் அந்த இயக்கம் தேறாது. அதேமாதிரி நல்ல கொள்கையும், நல்ல தலைமையும், நல்ல அமைப்பும் இல்லை என்றாலும் தேறாது.

### வலுவான தலைமை

இந்த மூன்றுமே சரியாக இருக்கிற காரணத்தால்தான், நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் 75 ஆண்டுகள் கடந்தும் இன்றைக்கும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பலமான இயக்கமாகச் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், நம் கழகத் தலைவர் அவர்கள் என்று நமக்கு வலுவான தலைமை இருக்கிறது. பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் வகுத்து தந்த திராவிட கொள்கை இன்றும் நம்முடன் இருக்கிறது. நம் தலைவர்கள் உருவாக்கிய, தலைமைக் கழகம் முதல் கிளைக் கழகம் வரையிலான பலமான கட்டமைப்பு இன்றைக்கும் செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றது. அதனால் தான், 76-வது ஆண்டில் நம் இயக்கம் வெற்றிகரமாக நடைபோட்டுக் கொண்டு இருக்கிறது. அந்த அமைப்பு பலத்துக்கு சான்றாகதான், இந்த சிங்கம்புணரியில் அண்ணா மன்றத்தை நாம் வெற்றிகரமாக திறந்திருக்கிறோம்.

இதை வெறும் கட்டடத்தை வைத்து மட்டும் நான் சொல்லவில்லை, இதற்காக பாடுபட்ட உடன்பிறப்புகளின் உழைப்பை வைத்து சொல்கிறேன். கழகத்தின் இந்த அமைப்பு பலத்தை பல அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியிலும், 50 ஆண்டுகளுக்கு மேல் கட்டிக்காத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலையை இங்கே திறந்திருக்கிறோம்.



### மாதவன் திருவுருவச் சிலை

பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும், பெருந்துணையாக இருந்த முன்னாள் அமைச்சர் அய்யா மாதவன் அவர்களின் திருவுருவ சிலையையும் இங்கே திறந்திருக்கிறோம். தமிழ்நாட்டில் மிகப் பெரிய மாற்றங்களுக்கு வித்திட்ட சட்டங்களை நிறைவேற்றியது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் என்றால், அதில் பெரும்பங்காற்றியவர் அய்யா மாதவன் அவர்கள் என்று சொன்னால், அது மிகையாகாது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த இரண்டே ஆண்டுகளில், யாராலும் மறக்க முடியாத 3 சிறப்பான விஷயங்களை செய்தார்.

முதல் திட்டம். சென்னை மாநிலத்துக்கு `தமிழ்நாடு' என்று பெயர் வைத்தார். இரண்டாவது சுயமரியாதைத் திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் தந்தார், மூன்றாவது இந்திக்கு தமிழ்நாட்டில் என்றைக்கும் இடமில்லை - இருமொழிக் கொள்கை தான் தமிழ்நாட்டின் மொழிக் கொள்கை என்று தீர்மானத்தை நிறைவேற்றியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். இந்த மூன்று சட்டங்களை யாராலும் மறக்க முடியாது. எந்த கொம்பன் வந்தாலும் மாற்ற முடியாது.

### ஆள்வது, அண்ணாதுரைதான்

இந்த மூன்றையும் செய்துவிட்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். ``டெல்லியில் ஆட்சியில் இருப்பவர்கள் அதிகாரமிக்கவர்கள். எங்கள் ஆட்சியை கூட அவர்களால் களைத்துவிட முடியும். ஆனால், என் இடத்தில் வேறு ஒருவர் வந்து உட்கார்ந்த பிறகு, நான் செய்ததை எல்லாம் மாற்றலாம் என்று நினைக்கலாம். அப்படி நினைக்கும்போது, அவர்களை அறியாமலேயே அவர்கள் உள்ளத்தில் ஒரு வித பயம் தோன்றும். அந்த பயம் அவர்கள் மனதில் இருக்கிறவரை தமிழ்நாட்டை ஆள்வது இந்த அண்ணாதுரைதான்” என்று சொன்னார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அப்படித் துணிச்சலாகச் சொன்னார் என்றால், இந்த சட்டங்களும், தீர்மானங்களும் வருவதற்கு, அப்போது சட்ட அமைச்சராக இருந்த அய்யா மாதவன் அவர்களின் சட்ட அறிவும் ஒரு முக்கிய காரணம். அதற்கு பிறகு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அமைச்சரவையிலும் பணியாற்றி இருக்கிறார். சட்டத்துறை, கூட்டுறவுத் துறை, தொழில்துறை என்று பல்வேறு துறைகளில் அமைச்சராக பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்.

1962-இல் முதன்முதலாக திருகோட்டியூர் சட்டமன்ற உறுப்பினராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வென்றார். அதற்கு பிறகு, மூன்று முறை திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினராகவும், ஒருமுறை மாநிலங்களவை உறுப்பினராகவும், இந்த மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து மக்களுக்காக பணியாற்றியுள்ளார். குறிப்பாக, இந்தப் பகுதியின் வளர்ச்சிக்காக நிறைய திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார். இயக்கத்திற்காக உழைத்தவர்களை, திராவிட இயக்கம் என்றுமே மறக்காது. அய்யா மாதவன் அவர்களும், வரலாற்றில் நீடித்த புகழோடு மக்கள் மனதில் என்றைக்கும் வாழ்வார்.

### ஓ.பி.டி.சொக்கலிங்கம்

அதேபோல், மறைந்த அண்ணன் ஓ.பி.டி.சொக்கலிங்கம் அவர்களின் தொண்டுகளையும் தியாகத்தையும் நாம் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறோம். 1957-ஆம் ஆண்டு தொடங்கி கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர்தான் அய்யா சொக்கலிங்கம் அவர்கள். எமெர்ஜென்சி காலத்தில் மதுரை சிறையில் அடைக்கப்பட்டவர் சொக்கலிங்கம் அவர்கள். இப்படிப்பட்ட தொண்டர்களின் உழைப்பால் மக்கள் செல்வாக்குடன் இருக்கிற திராவிட இயக்கத்தை எப்படியாவது ஒழிக்க வேண்டும் என்று ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசு நினைக்கிறது.

நேரடியாக மக்களைச் சந்திக்க முடியாதவர்கள், குறுக்கு வழியைத் தேடுகிறார்கள். அதனால்தான் எஸ்.ஐ.ஆர் என்கிற சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தை, தமிழ்நாட்டில் கொண்டு வந்திருக்கிறார்கள். எப்படியாவது தி.மு.க ஆதரவு வாக்குகளை எல்லாம் குறி வைத்து நீக்கப் பார்க்கிறார்கள். குறிப்பாக, கழகத்துக்கு ஆதரவாக இருக்கிற சிறுபான்மையினர், பெண்கள், ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் வாக்குகளை எல்லாம் நீக்கிவிட்டால், குறுக்கு வழியில் வென்று விடலாம் என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்டமிடுகிறது.

தமிழ்நாட்டில் இருக்கிற ஒவ்வொரு பூத்திலும், கடைசி கருப்பு - சிவப்பு தொண்டனை மீறி, ஒரு தகுதியான வாக்காளரைக் கூட உங்களால் நீக்க முடியாது. கழக உடன்பிறப்புகள் கடந்த 10 நாட்களாக இரவு - பகலாக எஸ்.ஐ.ஆர். திட்டத்தைச் சிறப்பாகச் செய்து வருகிறீர்கள். அப்படி உழைக்கிற ஒவ்வொரு தொண்டருக்கும் நான் என்னுடைய அன்பையும், பாராட்டையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், இது எதை பற்றியும் கவலைப்படாமல், திராவிட முன்னேற்றக் கழகம் எஸ்.ஐ.ஆரை ஆதரிக்கிறது என்ற ஒரே காரணத்துக்காக, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எஸ்.ஐ.ஆர் திட்டத்தை ஆதரிக்கிறது.

எஸ்.ஐ.ஆர். திட்டத்தை எதிர்த்து, சட்டப் போராட்டத்தையும் தலைவர் தொடங்கியுள்ளார். நிச்சயம் அதிலும் நாம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எஸ்.ஐ.ஆருக்கு எதிராக நாம் உச்ச நீதிமன்றத்தில் சட்ட போராட்டம் நடத்தினால், அவர்கள் எஸ்.ஐ.ஆருக்கு ஆதரவாக மனு தாக்கல் செய்துள்ளார்கள். நம்முடைய திராவிட மாடல் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை இந்தியாவின் நம்பர் ஒன் முதலமைச்சர் என்று ஒட்டுமொத்த இந்தியாவும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், எடப்பாடி பழனிசாமி அவர்களை பா.ஜ.க.வின் நம்பர் ஒன் அடிமை என்று ஒட்டுமொத்த இந்தியாவும் கேலி செய்து கொண்டுள்ளது.

### சிந்தித்துப் பார்க்க வேண்டும்

இந்த சிவகங்கை, வீரமங்கை வேலு நாச்சியார் - மருது பாண்டியர்கள் வாழ்ந்த வீரம் செறிந்த மண். இந்த மண்ணில் இருக்கிற அப்பாவி அ.தி.மு.க தொண்டர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கொஞ்சம்கூட முதுகெலும்பு இல்லாமல், பார்க்கிற கால்களில் எல்லாம் பொசுக்குனு விழுந்துட்டு இருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்கள். புதிதாக விழுவதற்கு கால்களைத் தேடிக்கொண்டு இருக்கிறார். இப்படிப்பட்ட அடிமைகளையும் கொள்கையற்ற கூட்டத்தையும் தமிழ்நாட்டு அரசியலில் இருந்தே அப்புறப்படுத்த வேண்டும். அதுதான் தமிழ்நாட்டின் எதிர்காலத்திற்கு நாம் செய்ய வேண்டிய கடமை. இன்றைய அரசியல் சூழலில், தமிழ்நாட்டின் உரிமைகளைக் காக்கின்ற அரசாக திராவிட மாடல் அரசுதான் இருக்கிறது.

மாநில உரிமைகளை நாம் தொடர்ந்து காப்பாற்ற வேண்டுமானால், அது கழகத்தால் - நம்முடைய தலைவர் அவர்களால் மட்டும்தான் முடியும். இன்றைக்கு, நாடு முழுவதும் பாசிச பா.ஜ.க-வுக்கு பதற்றத்தைக் கொடுக்கிற இயக்கமாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்தான் திகழ்ந்துகொண்டு இருக்கிறது.

### 200-க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி

இன்றைக்கு தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம், நாம் ஆளுங்கட்சி. ஆனால், இந்தியாவில் திராவிட முன்னேற்றக் கழகம்தான் சிறந்த எதிர்க்கட்சி என்பதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். எனவே, பாசிசத்திடம் இருந்து தமிழ்நாட்டைக் காப்பாற்ற வருகிற சட்ட மன்றத் தேர்தலில், கழக அணியை 200-க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். அதற்கு இந்த சிவகங்கை மாவட்டத்தில் உள்ள சிவகங்கை, காரைக்குடி, திருப்பத்தூர், மானாமதுரை ஆகிய 4 தொகுதிகளும் ஒரு தொடக்கமாக இருக்க வேண்டும்.

நம்முடைய கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க, நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சராக அடுத்த 4 மாதங்கள் களத்தில் நாம் அனைவரும் இறங்கி நம் பிரச்சாரத்தை செய்ய வேண்டும்.

இந்த நான்கு தொகுதிகளில் தலைவர் அவர்கள் யாரை வேட்பாளராக அறிவித்தாலும், நமக்குள் இருக்கிற சிறிய மனமாச்சர்யங்களை மறந்துவிட்டு, இங்கு இருக்கின்ற வேட்பாளர் யாராக இருந்தாலும், நம் தொகுதியின் வேட்பாளர் கலைஞர்தான். அவரின் வெற்றிக்காக நாம் உழைக்க வேண்டும். அதை நாம் மனதில் ஏற்றுக் கொண்டு நாம் தேர்தல் பணிகளில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த சிறப்பான வாய்ப்பை அளித்த மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் பெரியகருப்பன் அவர்களுக்கும், மாவட்ட நிர்வாகத்துக்கும் எனது நன்றியைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் கேஆர். பெரியகருப்பன், தங்கம் தென்னரசு, அன்பில் மகேஷ்பொய்யாமொழி, ரகுபதி, சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், தமிழரசி, முன்னாள் அமைச்சர் தென்னவன், மாவட்டக் கழக நிர்வாகிகள் கணேசன், சேங்கை மாறன், ஜோன்ஸ் ரூஸ், மாநகர மேயர் முத்துதுரை, கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் மாரியப்பன் கென்னடி, மருது அழகுராஜ், பூர்ண சங்கீதா, இராம கிருஷ்ணன், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் சுந்தர்ராஜன், போஸ், நல்ல சேசுபதி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பூமணி என்கிற பூமிநாதன், பாலசுப்பிரமணியன், சுப்பிரமணியன், சண்முக வடிவேல், மாணிக்கம், பேரூர் கழகச் செயலாளர்கள் கதிர்வேல், கார்த்திகேயன், பழனியப்பன், அசோக், வி.சி.பி.தாஸ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சேதுபதிராஜா, கே.எம். பொற்கோ, பரணி கிட்டு, மதிவாணன், கார்த்திக், மொராதீர் முகமத், மாவட்ட சுற்றுச்சூல் அணி அமைப்பாளர் வல்லபாய், பேரூராட்சித் தலைவர் அம்பலமுத்து உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.

---

## காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளியில்

# துணை முதல்வர் தலைமையில் அரசு விழா - குழந்தைகள் நாள் விழா!

## முதல்வரின் வாழ்த்துச் செய்தியை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வாசித்தார்!

**சென்னை, நவ. 16 -**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சிவகங்கை மாவட்டம், காரைக் குடி, அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளியில் நேற்று முன்தினம் (14.11.2025) பள்ளிக் கல்வித் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை ஆகிய துறைகளின் சார்பில் நடைபெற்ற அரசு விழா மற்றும் குழந்தைகள் நாள் விழாவில், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் குழந்தைகள் நாள் வாழ்த்துச் செய்தியை வாசித்தார்.**

**முதலமைச்சர் அவர்களின் குழந்தைகள் நாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-**

தமிழ்நாட்டின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களாக விளங்கும் குழந்தைகள் அனைவருக்கும் எனது உளமார்ந்த குழந்தைகள் நாள் வாழ்த்துகள்!

நூலைப்படி சங்கத்தமிழ்
நூலைப்படி முறைப்படி
நூலைப்படி!
காலையிற்படி கடும்பகல் படி
மாலை, இரவு பொருள்படும் படி
நூலைப்படி!
கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர் வாழ்வதெப்படி?
நூலைப்படி!

என்று பாவேந்தர் பாரதிதாசனார் அறிவுறுத்தியபடி, இனிமையான உங்கள் குழந்தைப் பருவத்தை நீங்கள் கல்வியில் செலவிட வேண்டும்! அனைத்துக் குழந்தைகளும் தரமான கல்வி பெற வேண்டும் என்பது தான் நமது அரசின் எண்ணம்!

எவராலும் அழிக்க முடியாத நிரந்தரச் சொத்து கல்வி மட்டுமே. நமது அய்யன் திருவள்ளுவரும் அழிக்கமுடியாத சிறந்த செல்வம் கல்வி என்கிறார்.

**“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு மாடல்ல மற்ற யவை”**

கற்பதில் இருந்து ஒரு குழந்தைகூடவிடுபட்டு விடக்கூடாது என்பதில் உறுதியாக உள்ள நமது திராவிட மாடல் அரசு, குழந்தைகளுக்காகப் பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்திவருகிறது. மிகப்பெரிய சவால்களையும் குழந்தைகள் சந்திக்க ஏதுவாக நமது கல்வியில் பல்வேறு மேம்பாடுகளைச் செய்து வருகிறோம். குறிப்பாக, கல்வியில் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகிறோம். அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் ‘ஸ்மார்ட்’ வகுப்பறைகள் நிறுவப்ப ட்டுள்ளன. நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளன. பாடப்பகுதிகள் டிஜிட்டல் பாடங்களாக மாற்றி அளிக்கப்படுகின்றன.

நம் குழந்தைகள் சோர்வடையாமல் ஆரோக்கியத்தோடும் உற்சாகத்தோடும் படிக்க வேண்டு மென்று தான், காலை உணவுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். இதனால், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் குழந்தைகள் ஊட்டச்சத்து உணவை உண்டு, கற்றலில் ஈடுபடுவதைக் கண்டு பூரிப்படைகிறேன்.

பல்வேறு போட்டிகள், விளையாட்டுகள், கொண்டாட்டங்கள், கலைத் திருவிழா, ஆற்றல் மன்றம், தொல்லியல் மன்றம், சுற்றுச்சூழல், வானவில் போன்ற மன்றங்கள், கல்விச் சுற்றுலாக்கள், தேசிய பசுமைப் படை, பாரத சாரண சாரணியர் இயக்கம், செஞ்சிலுவைச் சங்கம், தேசிய பசுமைப் படை, நாட்டு நலப்பணித் திட்டம், மகிழ்முற்றம் போன்றவை மூலமாக நீங்கள் பயிலவும் பல்வேறு வாழ்வியல் திறன்களைப் பெறவும் திராவிட மாடல் அரசு எண்ணற்ற வாய்ப்புகளை வழங்கி வருகிறது.

நம் குழந்தைகளின் கல்வி எக்காரணம் கொண்டும் தடைபடக் கூடாது என்பதற்காக, அரசு அதிக நிதியினை ஒதுக்கி உட்கட்டமைப்பு வசதிகளைப் படிப்படியாக மேம்படுத்தி வருகிறது. மலைப்பாங்கான பள்ளிகளில் உள்ள குழந்தைகள், பள்ளி செல்வதற்காக வாகன வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கல்வி மட்டுமல்ல, உயர்கல்வியும் தடையில்லாமல் கிடைக்க அனைத்து முன்னெடுப்பு களையும் நமது திராவிட மாடல் அரசு வழங்கி வருகிறது.

அன்புக் குழந்தைகளே, உங்களின் கவனம் முழுவதும் படிப்பது மட்டுமின்றி, உடல், மன நலனைப் பராமரிப்பதிலும் இருக்க வேண்டும். இன்றைய உலகில் வேண்டாத பல்வேறு பழக்கங்களும் உங்களைச் சுற்றிலும் திசைதிருப்பக் காத்துக் கிடக்கின்றன. அதிக நேரத்தை இணையத்திலும் சமூக ஊடகங்களிலும் செலவிடுவது உங்களின் பகுத்தறியும் சிந்த னையைச் சிதைத்து, மூளையை மழுங்கடித்து, ஏதொன்றிலும் ஆழங்காற்படாமல் தடுக்கிறது. எனவே, எதையும் அளவோடு, அறிவோடு, முறையாகப் பயன்படுத்த வேண்டும். குழந்தைகளின் உடல்நலனை வலுவானதாக்க உடற்கல்வி உதவும். உள்ளரங்க மற்றும் வெளி விளையாட்டுகள் புத்து ணர்ச்சியும் உற்சாகமும் தரும்.

ஒரு தாயின் கரிசனத்தோடு தந்தையின் அக்கறையோடு தமிழ்நாட்டுக் குழந்தைகள் ஒவ்வொருவரின் ஒட்டுமொத்த வளர்ச்சியினை உறுதி செய்வதற்கு நானும் திராவிட மாடல் அரசும் என்றும் துணைநிற்போம்! நாளைய தமிழ்நாடு வலிமையான தமிழ்நாடாகத் திகழ உழைப்போம்!

இவ்வாறு வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.